சுருக்கம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் – நாகப்பட்டினம் மாவட்டத்தில் சீர்காழி, கொள்ளிடம், செம்பனார்கோயில் மற்றும் மயிலாடுதுறை ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள 295 குடிநீர்தரம் பாதிக்கப்பட்ட குடியிருப்புகள் மற்றும் 315 வழிபோரக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு ரூ.105.70 கோடி மதிப்பீட்டில் அதிகாரம் அளிக்கப்பட்ட குழுவின் பரிந்துரை – நிர்வாக ஒப்புதல் ஆணை வெளியிடப்படுகிறது.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (குவ)துறை

அரசாணை (நிலை) எண். 163

நாள்: 11.8.2010

ஆடி 26 திருவள்ளுவர் ஆண்டு 2041

படிக்கப்பட்டது :

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநரின் கடித எண். கே.ர.109/குடிநீர் தரம் பாதிக்கப்பட்ட 295 குடியிருப்புகள்/ உபொ2/திமேபி/2007, நாள் 19.7.2010.

ஆணை :

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் நாகப்பட்டினம் மாவட்டத்தில் சீர்காழி, கொள்ளிடம், செம்பனார்கோயில், மயிலாடுதுறை ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள 295 குடிநீர் தரம் பாதிக்கப்பட்ட குடியிருப்புகள் மற்றும் 315 வழிபோரக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது என்றும் நிலத்தடி நீர் மதிப்பீட்டு குழு, இவ்வூராட்சிஒன்றியங்களை, நிலத்தடி நீரை அதிகமாக பயன்படுத்தப்பட்ட பகுதிகள் என வகைப்படுத்தியுள்ளதாகவும்; ஐக்கிய நாடுகள் வளர்ச்சி நிறுவனம், நீரின் தன்மையை வகைப்படுத்த குடிநீர்த்தர எல்லைக் கோட்டினை வரையறுத்துள்ளதாகவும், இந்த எல்லைக் கோட்டின் கீழ்க்கே உள்ள பகுதி, குடிநீர்த் தேவை மற்றும் பாசனத்திற்கும் தகுதியானது அல்ல என இவ்வெல்லைக்கோடு உணர்த்துவதாலும், 295 குடியிருப்புகளில் உள்ள குடிநீரில் கூடுதல் இரும்பு தாதுக்கள், மங்கனீஸ் மற்றும் திடக்கரைசல் உள்ளதாலும், தரம் பாதிக்கப்பட்ட 295 குடியிருப்புகளுக்கு கூட்டுக் குடிநீர் திட்டம் வடிவமைக்கப்பட்டது என்றும், திட்டம் வடிவமைக்கும் பொழுது 315 வழிபோரக் குடியிருப்புகளையும் சேர்த்து வடிவமைக்க அவசியம் ஏற்பட்டுள்ளது என்றும் இத்திட்டம், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களால் 2008–09 ஆம் ஆண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் என அறிவித்த திட்டங்களில் ஒன்றாகும் என்றும் தெரிவித்துள்ளார்.

2. மேலும் அவர் தெரிவிக்கையில், இத்திட்டப் பகுதியின் தற்போதைய மக்கட் தொகை 3,08,168 ஆகும் என்றும் இடைக்காலம் (2027) மற்றும் உச்சக் காலத்திற்கு (2042) மக்கட்தொகை முறையே 3,39,023 மற்றும் 3,69,805 ஆகும் என்றும் தரம் பாதிக்கப்பட்ட குடியிருப்புகளுக்கு நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் வீதமும் மற்றும் வழியோர குடியிருப்புகளுக்கு ஏற்கனவே உள்ள குடிநீர் ஆதாரத்தில் இருந்து வழங்கப்படும் குடிநீரின் அரவான நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 20 லிட்டரையும் சேர்த்து 40 லிட்டர் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளதென்றும், குழாய் வழி நீர் இழப்பு 10% எனவும் குழாயில் குன்றந்த பட்சம் 10 லி/நி செல்லும் வகையிலும் இத்திட்டத்திற்கான குடிநீர் தேவை இடைக்காலம் (2027) மற்றும் உச்சக் காலத்திற்கு (2042) முறையே 12.87 மில்லியன் லிட்டர் மற்றும் 13.76 மில்லியன் லிட்டர் என கணக்கிடப்பட்டுள்ளதாகவும், தலைமைபிடத்திலிருந்து ஊரகத் தரைமட்ட தொட்டிகள் வரை 20 மணி நேர நீர் உந்தலின்படி, தற்போதைய, இடைக்காலம் மற்றும் உச்சக் கால நீரின் தேவை முறையே 9,982 லி / நி, 10, 723 லி/ நி, 11,471 லி/நி ஆகுமென்றும், ஊரகத் தரைமட்ட தொட்டிகளிலிருந்து குடியிருப்புகள் வரை தற்போதைய, இடைக்காலம் மற்றும் உச்சக்கால நீரின் தேவை முறையே 18,208 லி / நி 19,900 லி / நி மற்றும் 21,720 லி / நி ஆகுமென்றும் தெரிவித்துள்ளார்.

3. இத்திட்டத்திற்கு தேவையான குடிநீரினை, சீப்புலியூர் மற்றும் குமாரமங்கலம் அருகில் கொள்ளிடம் ஆற்றில் 2 நீர் சேகரிப்பு கிணறுகள் அமைத்து நீர் எடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதென்றும், இக்கிணறுகளில் இருந்து 5,723 லி/நி x 23 மீ அழுத்தம் மற்றும் 5,000 லி/நி x 27 மீ அழுத்தம் கொண்ட டர்பைன் மின்னிறைப்பான்களால் நீர் உந்தப்பட்டு சீப்புலியூரில் அமைக்கப்படவுள்ள நீர் சேகரிக்கும் தரைமட்ட தொட்டிக்கு (14 ல.லி. கொள்ளளவு) 350 மி.மீ டி.ஐ. குழாய்கள் (2x 3,000 மீ. நீளம்) மூலம் கொண்டு வரப்படுமென்றும், சீப்புலியூரில் அமைக்கப்படவுள்ள நீர் சேகரிக்கும் தரைமட்ட தொட்டியிலிருந்து 15கி.மீ. நீளமுள்ள 560 மி.மீ. M.S குழாய் மூலம் தலைஞாயிறில் அமைக்கப்படவுள்ள தரைமட்ட தொட்டிக்கு (14 ல.லி. கொள்ளவு) கொணரப்படுமென்றும், இத்தொட்டியிலிருந்து, இரண்டு திசைகளில் 88 ஊரகத் தொகுப்பு தரைமட்டத் தொட்டிகளுக்கு, கப்பியாகுடி (3.50 ல.லி), குன்னம் (2.00 ல.லி), செம்மங்குடி (2.50 ல.லி), வள்ளளாளாகரம் (2.50 ல.லி), நடுக்கரை (3.50 ல.லி), மற்றும் கூடலூர் (1.00 ல.லி.) ஆகிய தரைமட்ட தொட்டிகளின் வாயிலாக, 400 மி.மீ. முதல் 250 மி.மீ. வரையில் டி.ஐ. குழாய்கள் மற்றும் 200 மி.மீ. பிவிசி முதல் 50 மி.மீ. பிவிசி வரையிலான 244.795 கி.மீ. நீளமுள்ள குழாய்கள் மூலம் கொண்டு வரப்படுகிறதென்றும், ஊரகத் தரைமட்ட தொட்டிகளில் இருந்து ஏற்கனவே உள்ள 566 மேல்நிலைத் தொட்டிகளுக்கு 200 மி.மீ. பிவிசி முதல் 50 மி.மீ. பிவிசி குழாய் வரை 523.285 கி.மீ. நீளமுள்ள நீர் உந்து குழாய்கள் மூலம் நீரேற்றம் செய்யப்பட்டு ஏற்கனவே 300.35 கி.மீ. நீளத்திற்கு பதிக்கப்பட்டுள்ள பகிர்மானக் குழாய்கள் மூலம் விநியோகம் செய்யப்படவுள்ளதென்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

4. இத்திட்டத்திற்கான அமைப்புச் செலவாக ரூ.105.70 கோடி, ஆண்டு பராமரிப்புச் செலவாக ரூ.3.88 கோடி, தனி நபர் செலவாக ரூ.3,430, 1000 லிட்டருக்கான குடிநீர் செலவாக ரூ.15.76 என்றும் மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளதென்றும், மண்டல அறிவுபூர்வமான நீராதாரம் கண்டறியும் குழு மற்றும் மண்டல தொழில் நுட்ப குழுவும் இத்திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கியுள்ளதென்றும், 07.04.2010 அன்று நடைபெற்ற தலைமை அலுவலக தொழில் நுட்பக் குழு மற்றும் மாநில அளவிலான தொழில் நுட்பக் குழுக் கூட்டங்களில் இத்திட்டத்திற்கு ஒப்புதல்

வழங்கப்பட்டுள்ளதென்றும், 17.05.2010 அன்று நடைபெற்ற மாநில அளவில் திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கும் குழுக் கூட்டத்தில், மத்திய அரசு 1,009 குடிநீர் தரம் பாதிக்கப்பட்ட குடியிருப்புகளுக்கு ஒப்புதல் வழங்கியுள்ளதாகவும், இதில் 295 குடிநீர் தரம் பாதிக்கப்பட்ட குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டமும் அடங்குமென்றும், தேசிய ஊரகக் குடிநீர் திட்டம் (மத்திய அரசு மான்யம்) மற்றும் குறைந்தபட்ச தேவைத் திட்டம் (மாநில அரசு மான்யம்) ஆகிய திட்டங்களின் கீழ் மான்யம் பெற்று செயல்படுத்தப்படுமென்றும், 2010-11, 2011-12 மற்றும் 2012-13 ஆகிய மூன்று நிதியாண்டுகளில், செயலாக்கத்திற்கு பணி ஆணை வழங்கிய தேதியிலிருந்து 2 ஆண்டுகளுக்குள் இத்திட்டம் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளதென்றும், 3 ஆண்டுகளில் தேசிய ஊரகக் குடிநீர் திட்டம், மற்றும் குறைந்த பட்ச தேவைத் திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் தேவைப்படும் மான்யத் தொகை ரூ.105.70 கோடிக்கான விவரம் பின்வருமாறு என்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் தெரிவித்துள்ளார்:-

வரிசை எண்.	மானிய விவரம்	தேவைப்படும் நிதி			மொத்தம்
		2010-11	2011-12	2012-13	
1	தேசிய ஊரக குடிநீர் திட்டம் (மத்திய அரசு)	2.21	22.05	19.85	44.11
2.	குறைந்த பட்ச தேவைத் திட்டம் (மாநில அரசு)	3.08	30.80	27.71	61.59
	மொத்தம்	5.29	52.85	47.56	105.70

5. இத்திட்டம் முடிவுற்றவுடன் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்படும் என்றும் வாரியம் தனது 6.7.2010-ம் நாளிட்ட தீர்மானம் எண் 2.4-ல் இத்திட்டத்திற்கு அரசின் நிர்வாக ஒப்புதல் பெற அதிகாரம் அளிக்கப்பெற்ற குழுவிற்கு பரிந்துரை செய்ய தீர்மானித்து இத்திட்ட கருத்துரு 14.07.2010ல் நடைபெற்ற அதிகாரம் அளிக்கப்பெற்ற குழுவின் 23வது கூட்டத்தில் வைக்கப்பட்டதென்றும், அதிகாரம் அளிக்கப் பெற்ற குழுவின் கவனமான பரிசீலனைக்குப் பின், வாரியப் பரிந்துரையை ஏற்று 14.7.2010 -ம் நாளிடப்பட்ட தீர்மான எண்.6-ல், நாகப்பட்டினம் மாவட்டத்தில் சீர்காழி, கொள்ளிடம், செம்பனார்கோயில், மயிலாடுதுறை ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள 295 குடிநீர் தரம் பாதிக்கப்பட்ட குடியிருப்புகள் மற்றும் 315 வழியோரக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கு அமைப்புச் செலவு ரூ.105.70 கோடி எனவும், ஆண்டு பராமரிப்பு செலவு ரூ.3.86 கோடி எனவும், தனி நபர் செலவு விகிதம் ரூ.3,430 எனவும் 1,000 லிட்டருக்கான குடிநீர்வழங்கு செலவு ரூ.15.76 எனவும் கணக்கிடப்பட்டு, இத்திட்டத்தினை தேசிய ஊரகக் குடிநீர் திட்டம் / குறைந்த பட்ச தேவைத் திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ், பத்தி 4-ல் தெரிவிக்கப்பட்டுள்ள நிதி பகுப்புடன் செயல்படுத்த அரசின் நிர்வாக ஒப்புதல் பெற அரசுக்கு பரிந்துரை செய்யத் தீர்மானித்தது என்றும் தெரிவித்துள்ளார்.

6. எனவே, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர், நாகப்பட்டினம் மாவட்டத்தில் சீர்காழி, கொள்ளிடம், செம்பனார்கோயில், மயிலாடுதுறை ஊராட்சி

ஒன்றியங்களிலுள்ள 295 குடிநீர் தரம் பாதிக்கப்பட்ட குடியிருப்புகள் மற்றும் 315 வழியோரக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கு அமைப்புச் செலவு ரூ.105.70 கோடி எனவும் ஆண்டு பராமரிப்பு செலவு ரூ.3.88 கோடி எனவும், தனி நபர் செலவு விகிதம் ரூ.3,430 எனவும் 1,000 லிட்டருக்கான குடிநீர் வழங்கு செலவு ரூ.15.76 எனவும் கணக்கிடப்பட்டு, இத்திட்டத்தினை தேசிய ஊரகக் குடிநீர் திட்டம் / குறைந்த பட்ச தேவைத் திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ், பத்தி 4-ல் தெரிவிக்கப்பட்டுள்ள நிதி பகுப்புடன் செயல்படுத்த அரசின் நிர்வாக ஒப்புதலைக் கோரியுள்ளார்.

7. மேற்கண்ட தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநரின் கருத்துருவினை நன்கு ஆராய்ந்தபின், அதனை ஏற்றுக்கொள்ள தீர்மானித்து, அதன்படி, நாகப்பட்டினம் மாவட்டத்தில் சீர்காழி, கொள்ளிடம், செம்பனார்கோயில் மற்றும் மயிலாடுதுறை ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள 295 குடிநீர்தரம் பாதிக்கப்பட்ட குடியிருப்புகள் மற்றும் 315 வழியோரக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினை ரூ.105.70 கோடி அமைப்புச் செலவிலும், ஆண்டு பராமரிப்புச் செலவாக ரூ.3.88 கோடி எனவும், தனி நபர் செலவு விகிதமாக ரூ.3,430 எனவும் 1,000 லிட்டருக்கான குடிநீர் வழங்கு செலவாக ரூ.15.76 எனவும் கணக்கிடப்பட்டு, இத்திட்டத்தினை தேசிய ஊரகக் குடிநீர் திட்டம் / குறைந்த பட்ச தேவைத் திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் செயல்படுத்த நிர்வாக அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.அஷோக் வர்தன் ஷெட்டி,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்,
சென்னை-5
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை-5
பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை-108.
மாவட்ட ஆட்சியர், நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம்
ஊரக வளர்ச்சி இயக்குநர், சென்னை-15.
நகல்:
முதலமைச்சர் அலுவலம், சென்னை-9.
மாண்புமிகு நிதி அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர்,
சென்னை-9
மாண்புமிகு துணை முதலமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9
நிதித்துறைச் செயலரின் தனிச் செயலர், சென்னை-9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலரின் தனிச் செயலர்,
சென்னை-9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அநமு2/குவ2/குவ3/குவ4/வசெ)துறை, சென்னை-9
இதே / உ.நகல்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

11/8/10
பிரிவு அலுவலர்.